செ.வெ.எண்: 767/2016 நாள்: 28.10.2016

# தோட்டக்கலைதிட்டவிழிப்புணர்வு முகாம்

கன்னியாகுமரிமாவட்டத்தில் தோட்டக்கலைமற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் பல்வேறுதிட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருகிறது. கன்னியாகுமரிமாவட்டத்திலுள்ளஅனைத்துவிவசாயிகளும் பயன் பெறும் நோக்கில் 04.11.2016 மற்றும் 05.11.2016 வெள்ளி, சனிஆகிய இரு நாட்களில் வடசேரிஉழவர் சந்தையில் வைத்துகாலை 10 மணிமுதல் மாலை 5.45 மணிவரைதிட்டவிழிப்புணர்வுமுகாம் நடைபெறஉள்ளது. கீழ்க்கண்டதிட்டங்களில் பயன்பெறவிரும்பும் விவசாயிகளிடமிருந்துவிண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

1. **தேசியதோட்டக்கலை இயக்கம்.**

தேசியதோட்டக்கலை இயக்கதிட்டத்தின் கீழ் 2016-17ம் நிதியாண்டில் பண்ணைகுறைபாடுகளைசரிசெய்தல் என்றசிறப்பு திட்டம் செயல்படுத்தப்படஉள்ளது. இத்திட்டத்தின் மூலம் தோட்டக்கலைவிவசாயிகள் தங்களுக்குதேவைப்படும் ரூ.4,000/- மதிப்பிலானபண்ணை இடுபொருட்களை தங்கள் சொந்தசெலவில் வாங்கிஅதற்குண்டானபட்டியலைசம்பந்தப்பட்டவட்டாரதோட்டக்கலைஉதவி இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் பட்சத்தில் இடுபொருட்கள் தோட்டக்கலைதுறைஅலுவலர்களால் பார்வையிடப்பட்டு 50%மானியமாகவிவசாயிகளின் வங்கிகணக்கில் ரூ.2,000/- வரவு வைக்கப்படும். விவசாயிஒருவருக்குஅதிகபட்சமாக ரூ.2,000/- மட்டுமேமானியமாகவழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குதேவையானஏணி, பிளாஸ்டிக் பெட்டிகள், பைப்புகள், கத்தரி, படர்வகைகாய்கறிகள் வளர்க்க இரும்பு கம்புகள், மரக்கலப்பை, நிரப்புகட்டை (Leveller) மூங்கில் கூடைகள், கடப்பாறை, மண்வெட்டி, அரிவாள், தார்பாலின் ஷீட், கவாத்துசெய்யபயன்படும் கத்தி, வரி முள் கம்பிரோல், ரோஸ்கேன், கோகோபீட் பைகள், மண் தொட்டிகள், தண்ணீர் பீப்பாய்கள், பாலீத்தீன் ஷீட்கள், கவாத்துசெய்யபயன்படும் அரிவாள், ரப்பர் பால் tapper, மண் வெட்டி,கடப்பாறை, மொட்டுகட்டும் கத்தி, கோடாரிமற்றும் வீட்டு/மாடித் தோட்டம் அமைக்கமற்றும் தோட்டக்கலைபயிர்கள் பயிரிடபயன்படும் இதர இடுபொருட்களும் வாங்கிபயன்பெறலாம். இம்மாவட்டத்திற்கு 1,500 நபர்களுக்குமட்டுமே30 லட்சம் இலக்குபெறப்பட்டுள்ளது.

2. **தேசியநுண்ணீர் பாசன இயக்கதிட்டம்**

பாக்கு, புகையிலைதவிரரப்பர் உட்படஅனைத்துதோட்டக்கலைபயிர்களுக்கும் சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைத்திடசிறு/ குறு விவசாயிகளுக்கு 100%மானியமும் இதரவிவசாயிகளுக்கு75%மானியமும் வழங்கப்படுகிறது. நுண்ணீர் பாசனம் அமைக்ககன்னியாகுமரிமாவட்டத்திற்கு 47.7 லட்சம் இலக்குபெறப்பட்டுள்ளது.

3. **தேசியவேளாண்மைவளர்ச்சிதிட்டம்**

இத்திட்டத்தின் கீழ் மாடித் தோட்டம் அமைத்திடகிட் ஒன்றுக்கு ரூ.200 மானியமும் ஒளிபொறிஒன்றுக்கு 2,800/-மானியமும் இன கவர்ச்சிபொறி 1,200/- மஞ்சள் ஒட்டும் பொறி 1200 மானியமும் ஆக மொத்தம் ரூ.5,200/- மதிப்பிற்கு இடுபொருட்கள் வழங்கப்படஉள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கானதிட்டங்கள்**

ஆதிதிராவிடவகுப்பைசேர்ந்தவிவசாயிகளுக்கு 16.6 சதவீதமும் பழங்குடி இன விவசாயிகளுக்கு 8%சதவீதமும் பெண்களுக்கு 33 சதவீதமும் கீழ்க்கண்டதிட்டங்களில் நிதிஒதுக்கீடுபெறப்பட்டுள்ளது.

1. தேசியதோட்டக்கலை இயக்கம்
2. தேசியநுண்ணீர் பாசன இயக்கதிட்டம்
3. தேசியவேளாண்மைவளர்ச்சிதிட்டம்
4. பெருநகரகாய்கறிஅபிவிருத்திதிட்டம்

இரண்டுநாட்கள் வடசேரிஉழவர் சந்தையில் வைத்துநடைபெறும் இம்முகாமில் கன்னியாகுமரிமற்றும் பேச்சிப்பாறைஅரசுதோட்டக்கலைப்பண்ணைகளின் உற்பத்திசெய்யப்படும், பழச்செடிகள் வாசனைத் திரவியப் பயிர்கள், மற்றும் அலங்காரசெடிகள் அரசுநிர்ணயித்துள்ளகுறைந்தவிலையில் விற்பனைக்குவைக்கப்படஉள்ளது.

மேலும் மாடித் தோட்டம் அமைத்திடமற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடபயன்படும் இதர இடுபொருட்களின் கண்காட்சியும் நடைபெறும். விவசாயிகள் தங்கள் நிலஉடைமைஆவணங்களுடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இரண்டு, குடும்பஅடையாளஅட்டை, ஆதார் அட்டைநகல், நிலதீர்வைரசீது, பயிர் அடங்கல், வங்கிகணக்கு புத்தகமுதல் பக்கநகல் போன்றஆவணங்களுடன் நேரில் வந்துஉடனடியாகமானியம் பெற்றுக் கொள்ள இது ஒருஅரியவாய்ப்பு. முதலில் வருபவருக்குமுதலில் முன்னுரிமைஎன்றஅடிப்படையில் மானியம் வழங்கப்படும். விவசாயிகள் இந்தஅரியவாய்ப்பினைபயன்படுத்திதமிழ்நாடுஅரசுவழங்கும் மானியத்தினைபெற்றுக் கொள்ளுமாறுகன்னியாகுமரிமாவட்டஆட்சியர் கேட்டுக் கொள்கிறார்.

**தோட்டக்கலைதுணை இயக்குநர்**
**நாகர்கோவில்**

**மாவட்டஆட்சித் தலைவர்**
**நாகர்கோவில்**

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**